1978 பிப்ரவரி 28]

திருக்குற்ருலத்தை சுற்றுலா மையமாக்கல்

* 305 வின— திரு. எம் எம். ஏ. ரசாக் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை மாவட்டத்திலுள்ள திருக்குற்ருலத்தை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருக்குற்ருலத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையமாக மேம்படுத்த 6-வது திட்டத்தில் இந்த இடத்தை சேர்த்திட தமிழக அரசு இந்திய அரசு சுற்றுலாத்துறைக்கு அண்மையில் அனுப்பியுள்ள தமிழக சுற்றுலா வள சர்வேயில் (Tamil Nadu Tourism potential Survey) யோசனை கூறியுள்ளது.

திரு. எம். எம். ஏ. ரசாக் : அது எந்த ஆண்டு நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எந்த ஆண்டு என்று குறிப்பிட்டுக் கூற முடியாது. ஆனல், தமிழக அரசினுடைய சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரை திருக்குற்ருலத்தை ஒரு முக்கிய தேசிய சுற்றுலா இடமாகக் கருதி மேற்கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது திருக்குற்ருலத்தை ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு டூரிஸ்ட் சென்டராக சேர்த்துக்கொள்ள பரிந்துரை செய்துள்ளதாகக் கூறிஞர். வேறு எந்தெந்த இடங்களை இந்தமாதிரி ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் டூரிஸ்ட் சென்டர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆருவது ஐந்தாண்டுத் திட்டததில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குப் பல்வேறு திட்டங்களை அரசு பரிந்துரை செய்திருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களை சேகரித்துத் தர இயலும்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : அவ்வாறு நிறைவேற்றப்படும் போது இங்கு ஏழை நடுத்தர மக்கள் தங்க வசதியாக கட்டிடங்கள் குறைந்த வாடகையில் கட்டிக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாநில சுற்றுலா வாரியத்தின் சார்பில் இப்போதே ஒரு திட்டம் 15 லட்சம் ரூபாய் செலவில் நடுத்தர மக்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு சுற்றுலா பயணிகள் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான இடத்தைச் காட்டிலாகாவில் இருந்து பெறுவதற்காக, அனுமதிக்காக சுற்றுலா வாரியம் காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் பயிற்றுநர்கள்.

*306 வினா— சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சியில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு மூலமாக நியமனம் செய்யப்பட்ட தமிழ் பயிற்றுநர்களை நீக்கியது உண்மையா?

(ஆ) அதன் காரணம் என்ன?

(இ) அப்படி பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் நியமனம் செய்ய இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ). இக் கேள்விகளுக்கு இடமில்லை.

சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன்: தாற்காலிகமாக அரசுத் துறையில் நியமனம் செய்யப்படுகிறவர்கள் நீக்கப்படும் போது எந்த அடிப்படையில் நீக்கப்படுகிறார்கள்? அரசுப் பணித் தேர்வு ஆணைக் குழு மூலமாகத் தேர்தெடுக்கப்பட்டவர்கள் தாற்காலிகமாக நியமிக்கப் பட்டவர்கள் நீக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட புகார்கள் எம்.எல். ஏக்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் எந்த அடிப்படையில் நீக்கப் படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களோ அந்த அடிப்படையில்தான் நீக்கப்படுகிறார்கள்.

திரு. ரா. மார்க்கப்பந்து: குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் கல்வித் தகுதி இல்லை, வயது வரம்பு சரியில்லை என்ற காரணத்தைக் காட்டி யார் யார் நியமிக்கப் பட்டிருந்தார்களோ அவர்களை எல்லாம் ஒரே